மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 20 திங்கட்கிழமை 05.08.2024 கதிர் 322




# பதவியைத் துறந்து நாட்டைவிட்டு தப்பினார் பங்களாதேஷ் பிரதமர்

**பங்களாதேஷில் மாணவர் போராட்டத்தால் உருவாகியுள்ள அசாதாரண சூழல் காரணமாக அந்நாட்டு பிரதமர் ஷேக் ஹசீனா ராஜினாமா செய்திருப்பதுடன், அந்த நாட்டை விட்டே வெளியேறியுள்ளார்.**

**பங்களாதேஷில் மாணவர் போராட்டம் மீண்டும் வெடித்துள்ளது. இதில் 90க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததைத் தொடர்ந்து, நிலைமை மோசமாகியுள்ளது.**

**ஆயிரக்கணக்கான போராட்டக் காரர்கள் தலைநகர் டாக்காவில் உள்ள அதிகாரப்பூர்வ பிரதமர் இல்த்திற்குள் நுழைந்துவிட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

2➤



## குவைத்தில் கைதான இலங்கை பாடகர்கள் ஜே.வி.பி க்கு நிதி சேகரிக்க சென்றவர்களாம்

‘வெளிநாட்டில் இருக்கும் நாங்கள்’ எனக் கூறப்படும் அமைப்பின் மூலம் நடத்த தீர்மானிக்கப்பட்டிருந்த இசை நிகழ்ச்சி ஒன்றுக்காக குவைத் சென்ற இலங்கையைச் சேர்ந்த பிரபல பாடகர்கள் உள்ளிட்ட 26 இலங்கையர்கள் அந்நாட்டு பாதுகாப்பு துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜே.வி.பியின் அரசியல் கூட்டணியான தேசிய மக்கள் சக்திக்கு நன்கொடை சேகரிக்கும் நோக்கில் இந்த இசை நிகழ்ச்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இசைநிகழ்சியில் கலந்துக் கொள்வதற்காக குவைத் சென்று அங்கு கைது செய்யப்பட்ட பிரபல பாடகர்கள் உள்ளிட்ட இலங்கையர்களில், மேலும் இருவர் இன்னுமும் பொலிஸ் காவலில் உள்ளனர்.

கைது செய்யப்பட்ட 26 பேர்களுள் 24 பேரை விடுவிக்க குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகம் நேற்று நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.

இந்த இசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்த இருவரை நேற்று வரையில் பொலிஸார் விடுவிக்கவில்லை.

இலங்கையைச் சேர்ந்த அவர்கள் இருவரும் முறையான அனுமதியின்றி அதனைஏற்பாடுசெய்துள்ளகாரணத்தினால் இந்தக் கைது இடம்பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

2➤

## பங்களாதேஷில் உள்ள இலங்கையர்கள் பாதுகாப்பாக உள்ளனர்

*பங்களாதேஷில்தொடர்ச்சியாக போராட்டங்கள் நடைபெற்று வரும் நிலையில் அங்குள்ள இலங்கையர்கள் தொடர்பில் பங்களாதேஷ ில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.*

*அதன்படி 2500 இலங்கையர்கள் பங்களாதேஷில் வசித்தவரும் நிலையில் இலங்கை சமூகமும் பாதுகாப்பாக இருப்பதாக உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.*

*இதேவேளை பங்களாதேஷில் உள்ள இலங்கையர்களில் தற்போது ஒன்பது மாணவர்கள் உயர்கல்வியைத் தொடர்வதாகவும் இவர்களில் எட்டு மாணவர்கள் சிட்டகாங் மருத்துவக் கல்லூரி விடுதிகளில் தங்கியுள்ளதுடன் மீதமுள்ள மாணவர்கள் பாதுகாப்பாக டாக்காவில் உள்ள உறவினர்களுடன் தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது*

## கட்டுப்பணம் செலுத்தினார் பொன்சேகா

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்குரிய கட்டுப்பணத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரான முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இன்று செலுத்தினார்.

சுயாதீன வேட்பாளராகவே அவர் போட்டியிடவுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இதுவரை 10 இற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 4 இந்திய மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், கோவிலான் கலங்கரை விளக்கத்திற்கு அப்பால் இலங்கை கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 4 இந்திய மீனவர்கள் ஒரு மீன்பிடி படகுடன் இன்று அதிகாலை கைது செய்யபபட்டுள்ளனர்.

2➤

## வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு 17,140,354 வாக்காளர்கள் தகுதி

எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க ஒரு கோடி 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலின் படி, ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு:-

1. கொழும்பு - 17,65,351
2. கம்பஹா - 18,81,129
3. களுத்துறை - 10,24,244
4. கண்டி - 11,91,399
5. மாத்தளை - 4,29,991
6. நுவரெலியா - 6,05,292
7. காலி - 9,03,163
8. மாத்தறை - 6,86,175
9. அம்பலாந்தோட்டை - 5,87
(யாழ்ப்பாணம் மாவட்டம் - 4,92,280
கிளிநொச்சி மாவட்டம் - 1,00907)
11. வன்னி - 3,06,081
(வவுனியா மாவட்டம் - 1,28,585
மன்னார் மாவட்டம் - 90,607
முல்லைத்தீவு மாவட்டம் - 86,889)
12. மட்டக்களப்பு - 4,49,686
13. திகாமடுல்ல - 5,55,432
14. திருகோணமலை - 3,15,925
15. புத்தளம் - 6,63,673
16. குருநாகல் - 14,17,226
17. அநுராதபுரம் - 7,41,862
18. பொலனறுவை - 3,51,302

2➤

## பரபரப்பான சூழ்நிலையில் நாடாளுமன்றம் கூடுகிறது பெரும்பான்மையை நிரூபிப்பதில் நெருக்கடி



ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கலுக்கு சில நாட்கள் உள்ள நிலையில், பரபரப்பான சூழ்நிலையில் நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் கூடுகிறது.

பிரதான கட்சிகள் குழுக்களாக பிரிவடைந்துள்ளதால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சித் தாவல்களில் ஈடுபடலாம்என்றும்எதிர்பார்க்கப்படுகிறது.

ராஜபக்ஷக்கள் அணி மற்றும் ரணில் அணிகள் என அரசாங்கத்தின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பிளவடைந்துள்ளதால் நாடாளுமன்றத்தில் இருதரப்பினாலும் பெரும்பான்மையைஇழந்தது உள்ளனர்.

இவ்வாறான நிலைமையில் நாடாராளுமன்றத்தில் ஆளும் கட்சி சார்பில் இரு தரப்பினராலும் பெரும்பான்மையை உறுதிப்படுத்த முடியாத நிலைமை உள்ளது.

பெரும்பான்மையை உறுதிப் படுத்துமாறு எதிர்க்கட்சித் தரப்பினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டால் நெருக்கடி நிலை ஏற்படலாம்.

இவ்வாறான நிலைமையில் நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்படலாம் என அரசியல் வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டது.

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

**பதவியை....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னதாக, அசாதாரண சூழலை கருத்தில் கொண்டு ஷேக் ஹசீனா பிரதமர் பதவியில் இருந்து ராஜினாமா செய்துவிட்டார்.

நிலைமை நிமிடத்திற்கு நிமிடம் மோசமாவதை உணர்ந்த அவர், தனது சகோதரியுடன் வங்கதேசத்தை விட்டே வெளியேறிவிட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

அவர் பயணம் செய்த ஹெலிகாப்டர் இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான திரிபுராவின் தலைநகர் அகர்தலாவை நோக்கிச் சென்றதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

**வரும் ஜனாதிபதி.....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

19. பதுளை - 7,05,772
20. மொனராகலை - 3,99,166
21. இரத்தினபுரி - 9,23,736
22. கேகாலை - 7,09,622

**குவைத்தில்....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த இசை நிகழ்ச்சிக்கு இலங்கையைச் சேர்ந்த சமனலீ பொன்சேக்கா, ஜொலீ சீயா எனப்படும் அப்புக்குட்டி சந்திரரதன சில்வா, இந்திரபாபா லியனகே, உபோகா நிர்மாணி, முபாரக் உள்ளிட்ட ஏராளமான கலைஞர்கள் குவைத் சென்றிருந்தனர்.

இந்நாட்டு கலைஞர்கள் குழுவினர் குவைத் இசைநிகழ்ச்சிக்கு கலந்துக்கொள்ள சென்றிருந்த போது அந்நாட்டு பொலிஸாரால் கைது செய்யபட்ட தகவல் அறியக் கிடைத்தவுடன் அவர்களை விடுவிக்க தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார அந்நாட்டில் காணப்படும் இலங்கைத் தூதரகத்திற்கு அறிவித்துள்ள நிலையில் அவர்களின் உதவியால் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாக அந்தச் செய்தி தெரிவிக்கின்றது.

இலங்கை கலைஞர்கள் வருகைத் தந்திருப்பது இசைநிகழ்ச்சிக்காக மாத்திரமே எனவும் அனுமதி கோரவில்லை என்பது தொடர்பில் அவர்கள் அறிந்திருக்கவில்லை எனவும் அவர்களை விடுவிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


**அத்துமீறி....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை கடற்படையினருடன் இணைந்து கடற்படையினர் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

4 இந்திய மீனவர்களுடன் கைப்பற்றப்பட்ட இழுவை படகு காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மயிலடி கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

# டயனாவுக்கு எதிரான வழக்கு தள்ளுபடி



நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நிராகரித்து உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த மனு இன்று பிரிதி பத்மன் சூரசேன, யசந்த கோதாகொட மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய மூவரடங்கிய உயர்நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்டது.

அதன்பின், 3 பேர் கொண்ட உயர்நீதிமன்ற நீதிபதிகளின் உடன்பாட்டின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மனுவை தள்ளுபடி செய்ய முடிவு செய்யப்பட்டது.

வெலிகம முன்னாள் மேயர் ரெஹான் ஜயவிக்ரமவினால் இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# ஊழல், மோசடிகளுக்கு இனிமேல் இடமில்லை

## ரொஷான் ரணசிங்க திட்டவட்டம்

ஐக்கிய தேசியக் கட்சியையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் மீண்டும் கட்டியெழுப்ப முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

பொலனறுவையில் இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசு திருடர்களை விரட்டி திருடர்களைப் பிடிப்பதற்காக மக்களை நியமித்தது. அது நடக்காத காரணத்தால் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக நியமித்தது.

இந்த நாட்டில் ஊழல், மோசடிகளுக்கு இனி இடமில்லை. புதிய வேலைத்திட்டத்துடன் இந்த நாடு கட்டியெழுப்பப்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக உலகம் அறிந்த ஒருவரை முன்னிறுத்த வேண்டும். பொதுஜன பெரமுனவைக் கட்டியெழுப்பக் கடுமையாக உழைத்தவர்கள் இருக்கின்றார்கள். அத்தகைய ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பது நல்லது.

நான் அமைச்சுப் பதவிக்காக முன்னும் பின்னுமாக குதிப்பவன் அல்லன். நாட்டின் எந்த மாவட்டத்தில் இருந்தும் சுதந்திரமாக நின்று நாடாளுமன்றம் செல்வேன்.” - என்றார்.



# ஹஷான் திலகரத்ன சஜித்துடன் சங்கமம்

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சிரேஷ்ட வீரர்களில் ஒருவரான ஹஷான் திலகரத்ன எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வின் நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்துக்கு ஆதரவளிக்கும் நோக்கில் இன்று ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொண்டார்.

பங்களாதேஷ் கிரிக்கெட் மகளிர் அணியின் பயிற்றுவிப்பாளர்களாகவும் தற்போது அவர் கடமையாற்றி வருகின்றார்.

அவரது பாரியாரும் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் ஏற்பாட்டாளராகவும் கடமையாற்றி வரும் திருமதி அப்சாரி சிங்கபாகு திலகரத்னவும் இன்று ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொண்டனர்.

# ஜனாதிபதியுடனான சந்திப்பில் ஆராயப்பட்ட மக்கள் பிரச்சினை





திருகோணமலை மக்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் சந்திப்பொன்று இடம் பெற்றது. குறித்த சந்திப்பு திருகோணமலை நகராட்சி மன்ற பிரதான மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம் பெற்றது.

இதன் போது வரலாற்று சிறப்பு மிக்க திருக்கோணேஸ்வர ஆலய விவகாரம், மக்களுடைய காணிகள் விடுவிப்பு, மக்கெய்சர் விளையாட்டு அரங்கு தொடர்பான பல பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

அத்துடன் இக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், திருகோணமலை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் மற்றும் அரசியல் பிரமுகர்கள் உட்பட 400 க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட

maalaikkathir@gmail.com

# விருப்பு வாக்குகளை பயன்படுத்துவது தமிழ் மக்களின் ஜனநாயக உரிமை

## தனது கருத்தை தெளிவுபடுத்துகின்றார் விக்னேஸ்வரன்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பது தொடர்பில் தான் தெரிவித்திருந்த கருத்துக்கள் பற்றி தவறான பிரச்சாரங்கள் செய்யப்படுவதாக குற்றஞ்சாட்டிய தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன், தமிழ் பொது வேட்பாளருக்கே தமிழ் மக்கள் தமது முதல் வாக்கிளை அளிக்க வேண்டும். 2ம், 3ம் விருப்பு வாக்குகளைப் பயன்படுத்துவது தமிழ் மக்களின் ஜனநாயக உரிமை. இன்னாருக்கு அதனை அளியுங்கள் என்று எந்தத் தருணத்திலும் நான் கூறவில்லை. கூறமாட்டேன் என்றும் தெரவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள கேள்வி பதிலிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தெரிவிக்கையில், தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூகங்கள் ஜனாதிபதி தேர்தலில் நிறுத்தும் போது ஒட்டு மொத்த தமிழ் மக்களும் அந்த வேட்பாளருக்குகே தமது வாக்குகளை அளிக்க வேண்டும் என்பதே எனது கோரிக்கை. விருப்பு வாக்கினை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைக்கு உட்பட்ட விடயம். இது தொடர்பில் அவர்கள் தான் தீர்மானிக்க வேண்டும். இன்னாருக்கு தான் தமிழ் மக்கள் தமது விருப்பு வாக்கிளை அளிக்க வேண்டும் என்று நான் எந்த கோரிக்கையினையோ அல்லது ஆலோசனையோ முன்வைக்கவில்லை. பல கேள்விகள் பத்திரிகையாளர்களினால் முன்வைக்கப்படும் போது எமது அடிப்படை குறிக்கோள்களை நாங்கள் சிதைத்திருப்பதாக எனது பதில்களை திரித்து வெளியிடும் பழக்கம் சில ஊடக சகோதரர்களுக்கு உண்டு என்பதைக் காணமுடிகின்றது. ஆனால் அவை என்னுடைய கருத்துக்கள் அன்று. நான் சில காலத்திற்கு முன்னர் தேர்தலைப் பிற்போட்டால் நாட்டுக்கு நன்மை பயக்கும்என்று கூறியது உண்மைதான். இப்பொழுதும் என்னுடைய அச்சம் இந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்விளைவுகள். எந்த ஒரு சிங்கள வேட்பாளரினாலும் ஐம்பது சதவிகித வாக்குகளைப் பெற முடியாமல் போகும் பட்சத்தில் நாட்டின் அரசியல் நிலை கவலைக்கிடமாகலாம். பல தீய சக்திகள் நாட்டில் குழப்ப நிலையினை ஏற்படுத்த முனையலாம்.இன்று சீனா தனது படையை இங்கு அனுப்ப இருப்பதாகச் செய்தி வந்துள்ளது. இது சிறுபான்மையினருக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம். பொருளாதார நிலையை பெரிதாகப் பாதிக்கலாம். நாட்டின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்படலாம். வெளிநாட்டு ஊடுருவல்கள் நிலைமையை இன்னும் சீரற்றதாக்கலாம். இவற்றைக் கருத்தில் கொண்டே நான் தேர்தலைப் பிற்போட்டால் நாட்டிற்கு நல்லது என்றேன்.

அதே நேரத்தில் நாட்டின் நலன் கருதி மூன்று முக்கிய வேட்பாளர்களும் இதனை எவ்வாறு வழி நடத்துவது என்று கலந்தாலோசிக்கலாம் என்றும் கூறினேன். அவ்வாறு கூறியதை மனதில் வைத்துத்தான் சில ஊடகங்கள் நான் ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்கு தமிழ் மக்கள் தமது 2வது விருப்பு வாக்கினை அளிக்க வேண்டும் என்று கூறியதாக தவறாக செய்தி வெளியிட்டிருக்கின்றார்கள்.

நாட்டின் நலன் கருதி நான் கூறியதற்கும் தமிழ் பொது வேட்பாளர் தெரிவில் எனது திடமான முடிவுக்கும் உறவமைத்து கூறியமை பத்திரிகையாளர்களின் ஊகமாகும். தமிழ் பொது வேட்பாளருக்கே தமிழ் மக்கள் தமது முதல் வாக்கிளை அளிக்க வேண்டும். 2ம், 3ம் விருப்பு வாக்குகளைப் பயன்படுத்துவது தமிழ் மக்களின் ஜனநாயக உரிமை. இன்னாருக்கு அதனை அளியுங்கள் என்று எந்தத் தருணத்திலும் நான் கூறவில்லை. கூறமாட்டேன்" என்றார்.

# தமிழ் இனமாக நாம் சிந்தித்தால் பொது வேட்பாளரே ஒரே தெரிவு

## விக்கிரமபாகு நினைவு நிகழ்ச்சியில் ஐங்கரநேசன்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துகின்ற முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இலங்கையில் தமிழர் ஒருவரால்ஒரு போதும்ஜனாதிபதியாக வரமுடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் பின்னர் சிதறிப்போய்க் கொண்டிருக்கும் தமிழ்த்தேசிய அரசியலை, தமிழ்த்தேசிய உணர்வு நிலையை சீர் செய்யவும், ஒருமுகப்படுத்தவும் பொதுவேட்பாளரால் இயலும். இது நிகழ்ந்துவிடக்கூடாது என்பதற்காகவே தென்னிலங்கை அரசியல்வாதிகளும், சில தமிழ் அரசியல்வாதிகளும் இதனை மூர்க்கமாக எதிர்க்கிறார்கள். தமிழ் மக்கள் கட்சிகளாக அல்லாமல் இனமாகச் சிந்தித்தால் தமிழ்ப் பொதுவேட்பாளரே ஒரேயொரு தெரிவாக இருக்க முடியும்என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் கலாநிதி விக்கிரமபாகு கருணரட்னவின் நினைவுகூர் நிகழ்ச்சி நேற்று ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி பிறைற் இன் திருமண மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ்த்தரப்பில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தவேண்டும் என்ற எண்ணக்கரு 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் முன்வைக்கப்பட்டது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அவர்களின் உரிமைப் போராட்டத்தைத் தொடர்ச்சியாக ஆதரித்துவந்த விக்கிரமபாகு கருணரட்ண தமிழ்தரப்பின் பொது வேட்பாளராக முன்மொழியப்பட்டும் இருந்தார். ஆனால் இதனைத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கருத்தில் எடுக்காது முள்ளிவாய்க்கால் யுத்தத்தில் நேரடியாகவே பங்கேற்ற சரத்பொன்சேகாவை ஆதரிப்பதாக முடிவெடுத்தனர். தமிழ் மக்களைச் சரத்பொன்சேகாவுக்கு வாக்களிக்கவைத்துப் பெரும் வரலாற்றுத்தவறிழைத்தனர். தற்போது, சரத்பொன்சேகா இராணுவம் குற்றமிழைத்திருந்தால் தமிழ் மக்கள் எவ்வாறு தனக்கு வாக்களித்திருக்க முடியும் என்று கேள்வி எழுப்புகின்றார்.

மேட்டுக்குடித் தமிழ் அரசியல்வாதிகள் எப்போதும் தெற்கில் ஐக்கிய தேசியக்கட்சியையே ஆதரித்து வருகின்றார்கள். ரணில் விக்கிரமசிங்கவுக்காகவே யுத்தத்தை முன்னெடுத்த தளபதிக்கு இரத்த நெடில் அகல முன்பாக வாக்குக் கேட்டார்கள். அத்தேர்தலில் விக்கிரமபாகு கருணரட்ன போட்டியிட்டுச் சில ஆயிரக்கணக்கான வாக்குகளையே பெற்றிருந்தார்.

அவருக்குத் தமிழ் மக்கள் ஆதரவளித்திருந்தால்கூட பேரினவாதத்தை எதிர்த்து அவரால் வெற்றிபெற்றிருக்க முடியாது. ஆனால், அவரை நாம் ஆதரித்திருந்தால் அவரைப்போன்று தமிழ் மக்களின் போராட்டத்தை ஏற்றுக்கொண்டு ஆதரிக்கக்கூடிய பல விக்கிரமபாகுக்களைத்தென்னிலங்கையில்நாம்உருவாக்கியிருக்க முடியும். இவரின் மறைவோடு சிங்கள மக்கள் மத்தியில் எங்களுக்காகப் பேசி வந்த ஒரேயொரு குரலும் இல்லாமற் போய்விட்டது.

மாகாண சபைத்தேர்தலைத் திட்டமிட்டு நடத்தாமல் விட்டவர்களே இப்பொழுது ஜனாதிபதித் தேர்தலைக் கருத்திற் கொண்டு மாகாணசபைத் தேர்தலை நடாத்துவது பற்றிப் பேசுகின்றார்கள்.

தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர்களுடன் பேரம் பேசுதல், கனவான ஒப்பந்தம் செய்துகொள்ளல் எல்லாம் கடந்தகாலக் கசப்பான அனுபவங்களாக எம்முன்னால் உள்ளன. தொடர்ந்தும் தவறிழைத்துக்கொண்டிருக்க முடியாது. ஜனாதிபதித் தேர்தல்களில் நாம் விட்ட தவறுகளைச் சரிசெய்ய வேண்டிய நேரம் இது. தமிழ்த்தேசிய அரசியலை நேர்செய்ய வேண்டிய தருணம் இது. தமிழ்ப் பொது வேட்பாளர் தமிழ் இனத்தின் ஒருமித்த ஒரு குறியீடு. அவர் யார்? அவரால் என்ன செய்ய முடியும்? என்று உரசிப்பார்த்துக்கொண்டு இருக்காமல் தமிழ் மக்கள் ஒரு இனமாகச் சிந்தித்து அவருக்கு வாக்களிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.



# வேட்பாளர்கள் கவனத்தை பெறுமா காணாமல் போனோர் விவகாரம்?

**ஹஸ்பர் ஏ ஹலீம்**

“உங்கள் இராணுவத்தை நம்பி கையில் ஒப்படைத்த எங்கள் பிள்ளைகள் எப்படி காணாமல் ஆக்கப்பட்டார்கள்? காணாமல் போனவர்களின் குடும்பங்களை மிரட்டுவதையும் அச்சுறுத்துவதையும் நிறுத்துங்கள்.

நாங்கள் கேட்பது இழப்பீடுகளையோ மரணச் சான்றிதழ்களையோ அல்ல. முறையான நீதி விசாரணையே” திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்களின் சங்கம் கடந்தவாரம் நடத்திய கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் ஏந்தியிருந்த வாசகங்களே இவை. வடக்கு கிழக்கில் ஜ/லை 24,2024 தொடக்கம் ஆகஸ்ட் 01,2024 வரை








எட்டு மாவட்டங்களில் இவ்வாறான பல போராட்டங்கள் நடந்தன. யுத்தம் முடிவுற்று 16 வருடங்கள் கடந்து விட்ட போதும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் தினமும் தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்காக வீதியில் இறங்கி போராடியே வருகின்றனர். இவ்வாறு தனது மூன்று சகோதரர்களை இழந்து தவிப்பவர்தான் தம்பலகாமம் கோயிலடியை சேர்ந்த எஸ்.விக்னேஸ்வரி வயது (54) . வடக்கு கிழக்கில் காணாமல் போன ஆயிரக்கணக்கானோரின் உரிமைகளுக்காக ‘வலிந்து கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டோருக்கான சங்கம்’ போராடி வருகிறது. அது மாத்திரமன்றி இலங்கை அரசாங்கம் காணாமல் போனோர்களுக்கான ஆணைக்குழுவையும் உருவாக்கியுள்ளதுடன் அதற்கென அலுவலகம் ஒன்றையும் நிறுவி உள்ளது.

இந்த அலுவலகம் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளிடத்தில் தொடர்ச்சியாக வாக்கு மூலங்களை பெற்று வருகிறது. இவ்வாறு வாக்கு மூலம் வழங்கியவர் ஒருவர் தான் தம்பலகாமத்தை சேர்ந்த கமலினி. “பல வாக்கு மூலங்களை ஆணைக்குழு முன்னிலையில் வழங்கியுள்ள போதிலும் எந்தவித தீர்வும் கிடைக்கவில்லை உளரீதியான பாதிப்புக்களையும் ஏமாற்றங்களையும் சந்தித்து வருகிறோம்” என தனது ஆதங்கத்தை வெளியிட்டார் அவர்.

திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 1349 பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாக காணாமல் ஆக்கப்பட்டுள்ள அலுவல தகவல் அதிகாரி டபிள்யூ. ஜீ.எஸ்.சீ.சம்பத் தெரிவிக்கிறார்.

“எனது கணவர் இன்னும் உயிரோடு இருக்கிறார் என்ற நம்பிக்கையில்தான் வாழ்கிறேன். 2008.07.10 அன்று சுங்கான் குழிக்கு பட்டியனூர் பட்டிக்கு சென்றவர் வீடு திரும்பவில்லை. கணவர் காணாமல் போகும் போது நான் நான்கு மாத கர்ப்பிணி. இப்போது எனது மகளுக்கு 15 வயதாகிறது. இது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தேன். காணாமல் போன ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தேன். எந்தவித பலனும் கிட்டவில்லை” என கிண்ணியா ஆலங்கேணியை சேர்ந்த நித்தியானந்தம் சுஜாதா வயது (54) எனும் மற்றொரு தாய் தனது கவலையை எம்மிடம் பகிர்ந்து கொண்டார்.

பலர் இவ்வாறாக குடும்ப உறவுகளை இழந்து பெரும் கவலையுடன் நாட்களை கடத்தி வருகின்றனர். தமக்கான நிரந்தர நீதியின்றி தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். (5ஆம் பக்கம் பார்க்க...)



# வேட்பாளர்கள் கவனத்தை.........

சர்வதேச மனித உரிமைகள் தினம்,காணாமல் போனோர் தினம், சுதந்திர தினம் என எல்லா விசேட தினங்களில் கவனயீர்ப்பு போராட்டங்களை நடாத்துகின்றனர். எனினும் நீதி மட்டும் கிட்டுவதாகத் தெரியவில்லை.

காணாமல் போன உறவுகள் பெரும்பாலானவர்கள் கணவனை இழந்த நிலையில் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களாக மாறியுள்ளனர். இவ்வாறு குச்சவெளி பிரதேச செயலக பிரிவில் தனது கணவன் காணாமல் போனமை தொடர்பில எல்.தேவிகா வயது (54) தனது ஆதங்கத்தை இவ்வாறு வெளிப்படுத்துறார்.

“எனது கணவராகிய லிங்கேஸ்வரன் 2008.05.20 அன்று சலப்பையாறு என்ற குடியிருப்பு பகுதியில் இருந்து திருகோணமலை நகரில் உள்ள தங்க ஆபரண கடையில் வேலை செய்து வந்தார். வேலைக்கு சென்றவர் திரும்பிவரவில்லை. மூன்று நாட்களாக தேடினேன் காணவில்லை. இவர் காணாமல் போகும் போது மூத்த மகளின் வயது ஆறு, இளைய மகளின் வயது ஒன்றரை ஆகும். இது தொடர்பில் குச்சவெளி பொலிஸில் முறைப்பாடு செய்தேன். அதனைத் தொடர்ந்து ஐசிஆர்சி,மனித உரிமைகள் ஆணைக்குழு என பல முறைப்பாடுகளை செய்தும் இன்னும் என் கணவர் கிடைக்கவில்லை” என்றார்.

இது போன்றுதான் ஏனைய குடும்பங்களும் தமது அன்றாட வாழ்வாதாரத்திற்காக தினம் தினம் போராடி வருகின்றன. தற்போதைய பொருளாதார நெருக்கடியில் தமது குடும்பத்தின் வயிற்றுப் பசியைப் பார்க்கின்ற அதேநேரம், தமது உறவுகளுக்காக போராட்டத்திலும் ஈடுபடவேண்டியுள்ளது. 2700 நாட்களுக்கு மேலாக வடக்கு கிழக்கில் எட்டு மாவட்டங்களில் காணாமல் போனவர்களின் குடும்பங்களின் போராட்டங்கள் தொடர்ந்து வருகின்றன.

இது தொடர்பில் திருகோணமலை மாவட்ட வலிந்துகாணாமல்ஆக்கப்பட்ட உறவுகளின்சங்கத் தலைவி செபஸ்டியன் தேவி தெரிவிக்கையில்,.

“16 வருடங்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம். இலங்கை அரசாங்கம் தீர்வினை தரவில்லை எத்தனையோ ஆணைக்குழு வந்தும் நீதியை தரவில்லை. சர்வதேசம் ஊடாக எங்களுக்கான உரிமை நீதியை கோரி நிற்கிறோம். நீதி தான் தேவை நிதி தேவையில்லை. ஐக்கிய நாடுகள் சபை இதற்கான எந்தவித விசாரணை மூலமாக நீதியை தரவில்லை. எனது மகன் 2008.03.19 அன்று அரச படையால் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார். எட்டு மாவட்டங்களில் எங்களுக்கான நீதி தேவை என்ற அடிப்படையில் போராட்டங்களை மேற்கொள்கிறோம். காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் (ழுஆP) போன்றன வெறும் கண் துடைப்பே. இதனால் சர்வதேச விசாரனை தேவை என்பதே எனது கோரிக்கை” என்றார்.

சர்வதேச நீதிப் பொறிமுறை, ஆணைக்குழு தொடர்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஐங்கரன் குகதாசன் தெரிவிக்கையில், “இலங்கை அரசாங்கத்தால்காணாமல் ஆக்கப்பட்ட சமவாயம் பின்னர்தான் உருவாக்கப்பட்டது . இதனால் உள்ளூர் பொறிமுறையின் கீழ் வழக்கு தாக்கல் செய்வதில் எந்த பலனும் இல்லை. சர்வதேச பொறி முறையானது பலவந்தமாக அல்லது விருப்பத்துக்கு மாறாக கொண்டு செல்லப்பட்டு காணாமல் போனவர்கள் பற்றிய ஐக்கிய நாடுகள் பணிக்குழுவில் சாட்சியங்களை முன்வைத்தாலும் அவர்களால் இலங்கை அரசாங்கத்துக்கு வெறும்பரிந்துரைகளை மாத்திரமே வழங்கலாம். பரிந்துரைகளை அரசாங்கம் அமுல்படுத்தாது. இதே போன்று காணாமல் ஆக்கப்பட்டோருக்கான ஆணைக்குழு என்பதும் நீதி வழங்குவதற்கான அதிகாரம் கொண்டதல்ல. உண்மைகளை கண்டறிவதற்காக உருவாக்கப்பட்டதே இதன் மூலம் எந்தவித பலனும் இல்லை” என்றார்.

2022 இல் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியான பின்னர் காணாமலாக்கப்பட்ட மக்களின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் துளிர்விட்டது. எனினும் கடந்த இரண்டு வருடங்களில் அவர் எந்த வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. வடக்கு கிழக்கிற்கு பல தடவைகள் விஜயம் செய்துள்ள அவர் காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களை சந்திப்பதற்கு முயற்சிக்கவுமில்லை. தற்போது ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தேர்தல் பிரசாரத்தில் முக்கிய இடம்வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ் அரசியல்வாதிகள் தாம் ஆதரிக்கும் வேட்பாளர்களிடம் இந்த விவகாரத்தை பிரதான கோரிக்கையாக முன்வைக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்ட மக்களுக்காக தொடர்ச்சியாக குரல் கொடுத்து வரும் தமிழ் தேசிய மக்கள் முண்ணனியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் இது தொடர்பில் தெரிவிக்கையில் “முள்ளிவாய்க்கால் வட்டுவாகல் பகுதி மற்றும் வவுனியா செட்டிக்குளம் பகுதியில் இராணுவத்தினரிடம் சரணடைந்த முன்னால் போராளிகள் உட்பட பல மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்டும் கடத்தப்பட்டுள்ளார்கள். இதற்கான முழு பொறுப்பையும் அரசாங்கமே ஏற்க வேண்டும். இதனையே எமது கட்சியான தமிழ் தேசிய மக்கள் முண்ணனியும் வலியுறுத்தி நிற்கிறது” என்றார்.

ஒட்டுமொத்தமாக சர்வதேச சமூகத்தின் சுதந்திரமான பொறி முறையை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கோரி நிற்கின்றனர். இலங்கை அரசாங்கத்திடம் இருந்து சர்வதேச சமூகம் புதிய பொறிமுறைகள் ஊடாக நீதியைப்பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையிலேயே இந்த மக்கள் போராடி வருகின்றனர். நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை சலுகைகளுக்காக தாரை வார்க்காது காணாமல்போனார் பற்றிய உண்மைகளைக் கண்டறிந்து நீதியைப் பெறுவதற்கான அழுத்தங்களை வழங்க பயன்படுத்த வேண்டும் என்பதே அனைவரதும் வேணவாவாகும்.



# உலக மக்களுக்காக கல்லடியில் வழிபாடு





(வி.ரி. சகாதேவராஜா)

உலக மக்கள் நன்மை கருதி இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் முன்னிலையில் கல்லடியில் சிறப்பு பிரார்த்தனையும் வழிபாடும் இன்று நடைபெற்றது.

மட்டக்களப்பு கல்லடி அருள்மிகு ஸ்ரீ பேச்சியம்மன் திருச்சடங்கு பூஜைகளின் முதல் நாள் பூஜையின்போது இவ்வழிபாடு உதவி பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரர்ச்சிதானந்தா ஜீ மகராஜ் தலைமையில் நடைபெற்றது. பாரம்பரிய முறைப்படி முதல் பூஜையை ராமகிருஷ்ணபுரம், ராமகிருஷ்ண மிஷன் துறவியர்களும் பக்தர்களும் மாணவர்களும் மேளதாளம் முழங்க கோவிலுக்கு சென்று வழிபாடுகளை நடத்தினர்.

அவர்கள் உலக மக்களுக்காக பிரார்த்தனை செய்து வழிபட்டனர்.







# ஒஸ்கார் அமைப்பு வசதி குறைந்த மாணவர்களுக்கு கற்றலுக்கான உதவிகள் வழங்கிவைப்பு!





(காரைதீவு நிருபர் சகா)

அவுஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியம்( ஒஸ்கார்) காரைதீவில் வசதி குறைந்த மாணவர்களுக்கு ஒரு தொகுதி பாதணிகளையும், சீருடைகளையும், புலமைப்பரிசில் 14 வருட கால வினா விடை நூலையும் வழங்கி வைத்தது.

இந்நிகழ்வு விக்னேஸ்வரா வித்யாலயத்திலும், காரைதீவு விஷ்ணு வித்தியாலயத்திலும் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

விக்னேஸ்வரா வித்தியாலய நிகழ்வு அதிபர் எஸ். சிவயோகராஜா தலைமையிலும், விஷ்ணு வித்யாலய நிகழ்வு அதிபர் எஸ். ரவீந்திரன் தலைமையிலும் நடைபெற்றது .

இந்த இரு நிகழ்வுகளுக்கும் ஒஸ்கார் அமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்க உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு வழங்கி வைத்தார்.

ஒஸ்கார் சார்பில் ஆசிரியர் கே. லோகநாதன், உ. சஜானந்த் ஆகியோர் ஏற்பாடுகளை செய்து கலந்து கொண்டனர். நிகழ்வில் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர். இதனை ஒஸ்கார் அமைப்பின் சமூக சேவைக்கான இணைப்பாளரும் முன்னாள் ஒஸ்கார் தலைவருமான வீரக்குட்டி விவேகானந்தமூர்த்தி அவுஸ்திரேலியாவிலிருந்து ஒழுங்கமைப்பு செய்து ஏற்பாடு செய்திருந்தார்

ஒஸ்கார் தலைவர் கந்தசாமி பத்மநாதன் (ராஜன்) தலைமையிலான ஒஸ்கார் குழுவினர் இன்னொரன்ன பல சேவைகளை செய்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிங்கள மொழிதின போட்டி அங்குரார்ப்பண நிகழ்வு



(வி.ரி. சகாதேவராஜா)

அகில இலங்கை சிங்கள மொழி தின போட்டியின் சம்மாந்துறை வலய போட்டிக்கான அங்குரார்ப்பண நிகழ்வு இன்று திங்கட்கிழமை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

வலய சிங்கள மொழி பாட வளவாளர் ஏ.எச்.நாஷிக் அகமட் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

பிரதான அதிதிகளாக வலயக் கல்விப் பணிமனை சார்பில் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா மற்றும் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய அதிபர் எம்.ரி.மொகமட் ஜனோபர் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

அம்பாறை மற்றும் ஏனைய வலயங்களில் இருந்து நடுவர்கள் கலந்து போட்டிகளுக்கு மத்தியஸ்தம் வகித்தார்கள்.




## உறுமய காணி உறுதி வழங்கலுக்குத் தடை

உறுமய காணி உறுதிப் பத்திர விநியோகம் உள்ளிட்ட பல வேலைத்திட்டங்களைத் தற்காலிகமாக இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம். ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவடைந்த பின்னர் குறித்த வேலைத்திட்டங்களை மீள நடைமுறைப்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடுவதனால் உறுமய காணி உறுதிப்பத்திரம் வழங்கும் வேலைத்திட்டத்தினை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

## சஜித்தின் "பிரபஞ்சம்" வேலை திட்டத்துக்கும் ஆணைக் குழு தடை!

எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச தலைமையில் முன்னெடுக்கப்படுகின்ற பிரபஞ்சம் வேலைத் திட்டம் தேரதல்கள் ஆணைக்குழுவினால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அம்பாறையில் நடைபெறவிருந்த பிரபஞ்சம் நிகழ்வுகளையும் தேர்தல்கள் ஆணைக்குழு இடைநிறுத்தியுள்ளது.

ஒன்பது பாடசாலைகளுக்கு வசதியானவகுப்பறைஉபகரணங்களை வழங்கும் பிரபஞ்சம் திட்டங்களே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தேர்தல்கள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடத்தும் பொதுக்கூட்டங்கள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு மௌனம் சாதித்த போதிலும், சஜித் பிரேமதாசவின் நிகழ்ச்சிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளமை நியாயமற்றது என்றும் நளின் பண்டார தனது முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் நாட்களில் பிரபஞ்சம் திட்டத்தில் 70 நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

## தேர்தல் சட்ட மீறல்களை நீங்களும் முறையிடலாம்

ஜனாதிபதித் தேர்தலின் போது பொலிஸார் உள்ளிட்ட அரச அதிகாரிகள் மேற்கொண்ட தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதன் ஆணையாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

0767914696 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அல்லது 0112505566 என்ற தொலை நகல் இலக்கத்திற்கு முறைப்பாடுகளை சமர்ப்பிக்கலாம்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட அரச அதிகாரிகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நேற்று வெளியிட்டது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.08.2024இல் வெளியிடப்பெற்றது.